**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், பெரியகுளம்**

வழக்கு எண் OS. No. 24/2014 நாள்: 23.02.2026

**<u>வா.சா.1 மீண்டும் இன்று அழைக்கப்பட்டு 2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வா.சா – 1 ராஜ்குமார் முன்னிலையானார். மொழிபெயர்பாளர் செல்வி. சுதாமணி அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**<u>2 ஆம் பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ மீண்டும் இன்று அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, 2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கில் நான் 2 ஆம் வாதி என்றால் சரிதான். தாவா சொத்து தேனி to மதுரை, சிட்கோ என்ற வளாகத்திற்குள் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து ஆரம்பத்தில் சேதுராஜா வகையறாவிற்கு என அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அதில் வீனஸ் டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் நிறுவனம் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். அது பங்குதாரர் நிறுவனம் என்றால் சரிதான். சிட்கோ மூலமாக சேதுராஜாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அரசு நிர்ணயித்த விலை தொகையை சேதுராஜா செலுத்தி மேற்படி சொத்துக்களை அவருக்கு பாத்தியப்பட்ட நிறுவனத்திற்கு உடமை ஆக்கிவிட்டார் என்றால் சரிதான். சிட்கோ விதியின் படி விலைக்கு வாங்கப்பட்ட பின்பு குறிப்பிட்ட ஆண்டுகள் கழித்து சொத்தானது வாங்கிய நபருக்கு முழுமையாக பாத்தியப்பட்டு விட்டது என்றால் சரிதான். அதே போல் அதன் பின்னர் தான் அரசாங்கம் யாருக்கு சொத்தை வழங்கியதோ அவர் பெயருக்கு சொத்து உரிமை மாற்றம் செய்ய இயலும் என்றால் சரிதான். அதே போல் 1 ஆம் வாதி எனது தந்தை ராஜகோபாலன். 1 ஆம் பிரதிவாதி திலகா

என்பவர் எனது தந்தையின் உடன் பிறந்த சகோதரர் சீனிவாசன் என்பவரின் மனைவி என்றால் சரிதான். சேதுராஜா நடத்தி வந்த நிறுவனத்தில் கடந்த 05.07.1994 ஆம் வருடம் எனது தந்தை மற்றும் எனது சித்தி திலகா மற்றும் நான் ஆகிய மூவரும் ஏற்கனவே சேதுராஜா நடத்தி வந்த வீனஸ் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் பங்குதாரராக சேர்த்து கொள்ளப்பட்டு சொத்தின் நிறுவனத்தை கூட்டு பங்குதாரராக நடத்தி வருகிறோம் என்றால் சரிதான். கடந்த 16.11.1994 ஆம் ஆண்டு மேற்படி சேதுராஜா வகையறா தேனி சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி வழக்கு சொத்தை பொறுத்து நானும் எனது தந்தை மற்றும் திலகா ஆகியோர்களுக்கு விடுதலை பத்திரம் எழுதி பதிவு செய்து மேற்படி சொத்தின் உரிமையில் இருந்து விலகி கொண்டார்கள் என்றால் சரிதான். அதே போன்று அந்த நிறுவனத்தின் பங்கு தாரர் என்ற நிலையில் இருந்தும் சேதுராஜா வகையறா விலகி கொண்டார்கள் என்றால் சரிதான். அதன் பின்னர் அந்த சொத்தின் முழு உரிமையாளர்களாக நான், எனது தந்தை, எனது சித்தி திலகா ஆகியோர் அனுபவித்து வந்தோம் என்றால் சரிதான். சேதுராஜா வகையறா விடுதலை பத்திரம் எழுதி கொடுத்தன் அடிப்படையில் தான் சொத்து எங்கள் மூவர் பெயருக்கும் உரிமை மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்கூறியவாறு எங்கள் மூவரில் எவரேனும் மற்ற நபர்களுக்கு சொத்தின் உரிமையை மாற்றம் செய்ய வேண்டும் என்றால் பத்திர பதிவின் மூலம் தான் மாற்றம் செய்ய முடியும் என்றால் சரியல்ல. காமராஜபுரத்தை சேர்ந்த இருதய ராஜ் மகன் சந்திரசேகரன் என்பவர் என் அம்மாவுடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அவர் தேனியில் ஸ்ரீ ரேணுகா ஆட்டோ பைனான்ஸ் என்ற பெயரில் பங்கு தாரர் நிதி

நிறுவனம் நடத்தி வந்தார் என்றால் சரிதான். மேற்படி நிதி நிறுவனத்திலும் நான் எனது தந்தை சித்தி பங்கு தாரர்களாக இருந்து வந்தோம் என்றால் சரிதான். மேற்படி நிதி நிறுவனத்தில் பண மோசடி செய்ததாக தேனி மாவட்ட குற்றப்பிரிவு மற்றும் பொருளாதார குற்றப்பிரிவு போலீசாரால் எங்கள் அனைவரின் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் தாவா சொத்தை ஜப்தி செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான், தந்தை, சித்தி ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டதால் நாங்கள் பங்கு தாரராக இருந்து வந்த தாவா சொத்தையும் சேர்த்து ஜப்தி செய்தார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நான் மைனராக இருந்த போது வீனஸ் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் பங்குதாரராக இருந்ததாக சொல்லி தாவா சொத்தின் மீது முழு உரிமை ஏற்படவில்லை என்று மனு தாக்கல் செய்து மேற்படி பொருளாதார குற்றப்பிரிவு வழக்கில் இருந்து நான் விடுவிக்கப்பட்டேன் என்றால் ஸ்ரீ ரேணுகா ஆட்டோ பைனான்ஸ் நிறுவனத்தில் பங்கு தாரராக இருக்கும் போது நான் மைனராக இருந்தேன். ஆனால் வீனஸ் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் பங்கு தாரராக இருக்கும் போது நான் மைனர் கிடையாது. எனது சித்தி திலகா, மேற்படி ஸ்ரீ ரேணுகா ஆட்டோ பைனான்ஸ் நிறுவனத்தில் active partner ஆக இல்லை என்றும் தினசரி தொழில் நடத்தி வரவில்லை என்றும் மனு தாக்கல் செய்து அந்த பொருளாதார குற்றப்பிரிவு வழக்கில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். வழக்கு முடிந்த பின்பு சொத்துக்களும் ஜப்தியில் இருந்து விடுவிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எனது சித்தி திலகா என்பவர் பெயரில் தாவா சொத்து இருந்ததன் பேரில் தான் அவர் சார்பாக

சொத்தின் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னால் வில்லங்க சான்றிதழில் அவர் பெயரில் இருந்ததால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த கால கட்டத்தில் எனது தம்பி 3 ஆம் வாதியான சரவணக்குமார் மேற்படி வழக்கில் குற்றவாளி இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து சரவணக்குமாருக்கு உரிமையில்லை என்றும் பாத்தியப்பட்டதும் இல்லை என்பதால் தான் மேற்படி வழக்கில் ஜப்தி செய்யப்படவில்லை என்று சொன்னால் 3 ஆம் வாதி அந்த சமயத்தில் ஸ்ரீ ரேணுகா ஆட்டோ பைனான்ஸ் நிறுவனத்தில் பங்கு தாரராக இல்லை. ஆனால் வீனஸ் டெக்ஸ்டைல்ஸ் நிறுவனத்தில் பங்கு தாரராக 01.04.2001 ஆம் வருடத்தில் இருந்து வந்தார். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றும் அந்த கால கட்டத்தில் சரவணக்குமாருக்கு வழக்கு சொத்தின் மீது எந்த உரிமையையும் இல்லாததால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது தான் உண்மை என்று சொன்னால் சரியல்ல.

(2 ஆம் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

SANKAR Digitally signed by SANKAR Date: 2026.02.23 17:28:11 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**